# சீர்காழியில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்ற பிரச்சாரக் கூட்டத்தில் மக்கள் கடல்!



## எதிர்க்கட்சித் தலைவராக இருந்துகொண்டு – தராதரம் இல்லாமல் பேசி

## தன்னையும், தன் கட்சியையும் அசிங்கப்படுத்தும்

# பழனிசாமியை அரசியலில் இருந்தே துடைத்தெறிய வேண்டும்!

## சீர்காழி பிரச்சாரக் கூட்டத்தில்

## தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் தாக்கு!

**சீர்காழி, ஏப்.8-**

**“பழனிசாமி என்ற அசிங்கத்தை அரசியலில் இருந்தே துடைத்தெறிய வேண்டும்” எனவும், “மதுரையில் பா.ஜ.க. எம்.எல்.ஏ. வெற்றி பெற்றால், மதுரைக்கு மெட்ரோ கிடைக்கும்” என்று ப்ளாக்மெயில் செய்ய மகாராஷ்டிர முதலமைச்சர் பட்னாவிஸுக்கு வெட்கமாக இல்லையா?” என்றும் சீர்காழியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

**கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (07-04-2026) மாலை, சீர்காழியில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:-**

திருவாரூரில் தொடங்கி, தமிழ்நாட்டின் தெற்கு, மேற்குப் பகுதிகளில் பிரச்சாரத்தை முடித்துவிட்டு, இப்போது மீண்டும் டெல்டாவிற்கே அடுத்த ரவுண்டுக்காக வந்திருக்கிறேன். தமிழ்நாட்டில் மற்ற ஊருக்கெல்லாம் நான் முதலமைச்சர்! ஆனால், இந்த சீர்காழியைப் பொறுத்தவரையில், நான் முதலமைச்சர் ஆவதற்கு முன்பே, உங்கள் ஊர் மாப்பிள்ளை! ஏழாவது முறையாக திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைய - திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைய, உங்கள் ஊரில் பெண்ணை எடுத்த உரிமையோடு, உங்கள் ஊர் மருமகனாக வாக்கு கேட்டு வந்திருக்கிறேன்.

### நாகை எப்போதும் தி.மு.க. வாகை சூடும் மாவட்டம்!

அதுமட்டுமல்ல, இங்கு தலைவர் கலைஞர் பிறந்த திருக்குவளை இருக்கும் நாகப்பட்டினத்தில் இருந்தும் வந்திருக்கிறீர்கள்! நாகை எப்போதும், தி.மு.க. வாகை சூடும் மாவட்டம்!

அதேபோன்று, ஆயிரம் ஆனாலும் மாயூரம் ஆகாது என்று சொல்லுவார்களே! நம்முடைய மயிலாடுதுறை மாவட்டத்திலிருந்தும் வந்திருக்கிறீர்கள்.

நாகப்பட்டினம், மயிலாடுதுறை - இந்த இரண்டு மாவட்டத்தில் இருக்கும் அனைத்து தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணியின் வெற்றி நூறு பர்செண்ட் உறுதி. இப்போது வேட்பாளர்களை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

### நம் வேட்பாளர்களுக்கு மாபெரும் வெற்றியைத் தாரீர்!

முதலில், பூம்புகார் சட்டமன்றத் தொகுதியின் நமது வெல்லும் வேட்பாளர் நிவேதா முருகன் அவர்கள். மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர். மாவட்ட விவசாய அணி அமைப்பாளராக இருந்து உயர்ந்தவர். சட்டமன்ற உறுப்பினராக இருந்து கடந்த ஐந்தாண்டு காலத்தில் ஏராளமான திட்டங்களை பூம்புகார் தொகுதிக்குக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார். அவருக்கு நீங்கள் எல்லாம் உதயசூரியன் சின்னத்தில் உங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்.



அடுத்து, மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒய்.என். ஜமால் முகமது யூனுஸ் அவர்கள். என்னுடைய அன்புக்குரிய சகோதரர் ராகுல் காந்தி அவர்களின் நம்பிக்கையைப் பெற்ற வேட்பாளர். இளைஞர் காங்கிரஸ் பொதுச் செயலாளராக இருந்து பணியாற்றியவர். அவருக்கு நீங்கள் எல்லாம் கை சின்னத்தில் உங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்.

அடுத்து, சீர்காழி சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் ம.தி.மு.க.வைச் சேர்ந்த வழக்கறிஞர் செந்தில் செல்வன். எனது ஆருயிர் அண்ணன் வைகோவின் நம்பிக்கையைப் பெற்ற வேட்பாளர். மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில தணிக்கைக் குழு உறுப்பினர். அவருக்கு, உதயசூரியன் சின்னத்தில் உங்கள் வாக்குகளை நீங்கள் அளிக்க வேண்டும்.

> **தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியில் இருப்பதால் தான், தொகுதி மறுவரையறைப் பற்றி, பா.ஜ.க. அரசு அறிவிப்பதற்கு முன்பே விழிப்புணர்வை நாம் ஏற்படுத்தி னோம், அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நாம் கூட்டினோமே! இந்தியா முழுவதும் இருந்து முதலமைச்சர்களை சென்னைக்கு அழைத்து, கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டம் நடத்தி, தீர்மானங்கள் நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைத்தோமே! ஏன், சட்டமன்றத்திலும் தீர்மானம் நிறைவேற்றினோம்.**

அடுத்து, வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் மா.மீ. புகழேந்தி அவர்கள். நம் நெஞ்சம் எல்லாம் நிறைந்திருக்கும் கழக முன்னோடி, ‘மா.மீ.’ என்று அன்போடு அழைக்கப்படும் மா. மீனாட்சி சுந்தரத்தின் அன்பு மகன். 1986 முதல் கழகத்தின் அனைத்துப் போராட்டங்களிலும் பங்கெடுத்து சிறை சென்றவர். 25 ஆண்டுகாலமாக வேதாரண்யம் நகரக் கழகச் செயலாளராக இருந்து பணியாற்றிக் கொண்டிருப்பவர். அவருக்கு, நீங்கள் உதயசூரியன் சின்னத்தில் ஆதரித்து வெற்றி பெற வைக்க வேண்டும்.

### ஜனநாயகத்தை காத்திட தி.மு.க. கூட்டணியை ஆதரிப்பீர்!

அடுத்து, நாகப்பட்டினம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லா அவர்கள். சட்டமன்றத்தில் மனித உரிமைகளுக்காகவும் - ஜனநாயக உரிமைகளுக்காகவும் - சிறுபான்மையினர் நலனுக்காகவும் ஆணித்தரமாகவும் - அழுத்தமாகவும் குரல் கொடுக்கக் கூடியவர். கல்லூரி பேராசிரியராக இருந்து அரசியலுக்குள் நுழைந்து, ஒரு இயக்கத்திற்குத் தலைமை தாங்கி, இன்றைக்கு அதை நடத்திக் கொண்டிருப்பவர். இன்னும் சொல்ல வேண்டும் என்றால், நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் முக்கியத் தூண்களில் ஒருவராக பேராசிரியர் ஜவாஹிருல்லா அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார். அவருக்கு, நீங்கள் எல்லாம் உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை அளித்து, அவரை வெற்றி பெற வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சதோதரி லதா தங்கமணி அவர்கள். தலைவர் கலைஞர் அவர்கள் பிறந்த திருக்குவளைக்கு அருகில் இருக்கும் வாழக்கரையில் பிறந்தவர் அவர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் மாதர் சங்க மாநிலத் துணைத் தலைவராக செயல்பட்டு வருகிறார். மக்களுக்கான போராட்டங்களில் முன்னின்று பங்கேற்பவர். அவருக்கு, அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னத்தில் வாக்கினை வழங்கி அவரை வெற்றி பெற வைக்க வேண்டும்.

### ஏராளமான திட்டங்களை தந்து விட்டுத்தான் வாக்குக் கேட்கிறேன்!

இப்போது நான் அறிமுகப்படுத்திய, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் ஆறு வேட்பாளர்களையும் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் பெற்றி பெற வைக்க நீங்கள் எல்லாம் தயாராவிட்டீர்களா? வெற்றி உறுதியா? சத்தமாக! வெற்றி உறுதியாகிவிட்டது, வேட்பாளர்கள் இப்போது உட்காரலாம். உங்களுக்கு சீட் கொடுக்கப் பட்டுவிட்டது.

என்னதான் உங்கள் ஊர் மருமகனாக இருந்தாலும், வெறும் கையோடு நான் உங்களிடம் வாக்கு கேட்டு வரவில்லை. 5 ஆண்டுகாலமாக ஏராளமான திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்த உரிமையுடன் உங்கள் ஆதரவைக் கேட்க வந்திருக்கிறேன்.

### முதலில், மயிலாடுதுறை மாவட்டம்!

மயிலாடுதுறை நகராட்சியில் புதிய பேருந்து நிலையம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகம்.

மயிலாடுதுறையில் 45 கோடி ரூபாயில் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரமுயர்த்த கூடுதல் கட்டடம்.

சீர்காழி அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவுக் கட்டடம்.

பூம்புகார் கடற்கரையில் சுற்றுலா வளாகம் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு பணிகளை செய்திருக்கிறோம்.

இதுபோக, சீர்காழி, தரங்கம்பாடி வட்டங்களில் கடல்நீர் உட்புகுவதை தடுக்க கடைமடை நீரொழுங்கிகள் அமைக்கும் பணி, தரங்கம்பாடி கிராமத்தில் மீன்பிடி துறைமுகம் உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

அதேபோன்று, மயிலாடுதுறைக்கு மருத்துவக் கல்லூரியும்,

இங்கு இருக்கும் கூட்டுறவு சர்க்கரை ஆலை மீண்டும் இயக்குவதற்கான பணிகளும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

அடுத்து, நாகை மாவட்டத்திற்கு வருகிறேன்.

ஒரு பக்கம் சிக்கல் சிங்காரவேலர் கோயில், இன்னொரு பக்கம் நாகூர் தர்கா, இன்னொரு பக்கம் வேளாங்கண்ணி மாதா கோயில் என தமிழ்நாட்டின் மத நல்லிணக்கத்திற்கு அழகான சாம்பிள், நாகப்பட்டினம் தான்!

### ஐந்தாண்டுகளில் கழக அரசின் சாதனைகள்!

**கடந்த 5 ஆண்டுகளில், உங்களுக்காக,**

**வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் புதிய கட்டடம்.**

**அக்கரைப்பேட்டை மேம்பாலம்,**

**27 மினி பேருந்துகள் சேவை,**

**இசைமுரசு ஹனீஃபா நூற்றாண்டு நினைவுப் பூங்கா,**

**துறைமுக மேம்பாட்டுப் பணிகள் உள்ளிட்ட பல பணிகளை நாகை மாவட்டத்தில் செய்து கொடுத்திருக்கிறோம்.**

**இதுபோக,**

**நாகப்பட்டினம் புதிய புறநகர் பேருந்து நிலையம்,**

**நாகப்பட்டினம் நியோ டைடல் பூங்கா,**

**பணிபுரியும் பெண்களுக்கான தோழி தங்கும் விடுதி,**

தொடர்ச்சி 6–ஆம் பக்கம்